# மன்னர்களின் அறச்செயல்கள்

**தேவி.சி**
**உதவிப் பேராசிரியை, தமிழ்த்துறை,**
**காமராஜ் கல்லூரி, தூத்துக்குடி.**

12

**ஆய்வுச் சுருக்கம்**

பொன்னாலும் பொருளாலும் நாம் அடையும் இன்பங்கள் எல்லாம் நிலையற்றது. நிலையான இன்பத்தைத் தருவது இலக்கியத்தினால் அடையும் இன்பமே . தமிழக மன்னர்கள் மற உணர்வுடன், அற உணர்வும் உடையவர்களாகத் திகழ்ந்துள்ளனர். இலக்கியங்களில் கொட்டிக் கிடக்கும் வாழ்வியல் சிந்தனைகள் அறநெறிக்கு அடிப்படையானவையாக அமைகின்றன. முடியுடை வேந்தர்கள் கொற்றம் வைத்து சீரோடும் சிறப்போடும் , போரோடும் புகழோடும், மறத்தோடும், அறத்தோடும் பாராண்ட காலம் நம் இலக்கியக் காலம். இவ்விலக்கியங்கள் மனித வாழ்வை உயர்த்தும் வாழ்வியல் கருத்துக்களைக் கூறி மனிதனை வாழ்வாங்கு வாழச் செய்கிறது. மக்களாகப் பிறந்தவர்கள் அனைவரும் உயர்வாக மதிக்கப்படுவது இல்லை. அவர்களில் அறவொழுக்கம் உடையவர்களே உயர்ந்தவர்கள் என மக்களால் மதிக்கப்படுகிறார்கள். அற ஒழுக்கம் உள்ள ஒருவனுக்கே சென்ற இடமெல்லாம் சிறப்பு உண்டாகிறது.

**முன்னுரை**

தமிழ்ச் சமூக வரலாறு நீண்ட நெடிய வரலாறு . மனித குலம் தோன்றி நிலை பெற்ற செயல்முறையை விளக்கும் ஒளிவிளக்காய்த் திகழ்ந்து வருகிறது. அரச மரபில் பிறவிக் குணமாகவே கொடைப் பண்பினைக் காணலாம் . அரசனே மக்களுக்கு இறைவனாக விளங்கினான். அரசை ஆள்கின்ற காரணத்தினால் அரசன் எனப் பெயர் பெற்றான். மக்கள் வாழ்க்கையைச் செம்மையடையச் செய்தவன் அரசனே ஆவான். . இலக்கியக் காலத்தில் வாழ்வியல் பண்புகள் வளரக் காரணமாக செயல்பட்டவர்கள் அரசர்களே ஆவர்.

**கொடைப்பணபு**

அதியமான் கொடைத்திறம் மிக்கவன். அவனை நாடி வந்தவருக்கு விருந்து உபசரிப்பான். தனது நாட்டின் உயர்ந்த மலையில் பழுத்துக் கனிந்த நெடுங்காலம் உயிர் வாழ வைக்கின்ற நெல்லிக்கனியைத் தனக்கென வைத்துக் கொள்ளாமல் ஒளவைக்கு மனமுவந்து கொடுத்தான் அதியமான்.

"நான் இந்தக் கனியை உண்டு நீண்ட நாள் வாழ்வதால் பயனில்லை. நீங்கள் அதனை உண்டு நீண்ட நாள் வாழ வேண்டும். உங்களால் தமிழ் வளர வேண்டும். அதற்காகவே இக்கனியைத் தந்தேன்" என மகிழ்வோடு கூறினான்.

**விருந்தோம்பல்**

ஏழடி நடந்து சென்று வரவேற்றலும், வழி அனுப்புதலும் தமிழரின் பண்பாடு. கரிகாற் பெருவளத்தான் தான் மன்னனாக இருந்தும், தன்னை நாடிவரும் பொருநர்,டன் மன்னன் இரவலராக இருந்தும் அவர் தமக்கு வேண்டிய சிறப்புகள் அனைத்தையும் செய்தான் . நான்கு குதிரைகள் பூட்டப்பட்ட தேர்வரை ஏழு அடி தன் காலால் நடந்து சென்று வழி அனுப்பினான். இதனை **'காலில் ஏழடிப்பின் சென்று'** என்று **பொருநராற்றுப்படை (166)** கூறுகின்றது. கரிகாற் பெருவளத்தான்

பொருநர்க்குச் சுடச்சுட இறைச்சியைக் கொடுத்து உண்ணச் செய்தான். கொல்லையை உழும் கொழு உழுது உழுது தேய்ந்ததைப் போல 'கரிகாலன் அருகிருந்து உபசரித்த இறைச்சியை மென்று மென்று பல்லும் மழுங்கி போயின ' என்று **முடத்தாமக்கண்ணியார்** நகைச்சுவைப் படக் கூறுகின்றார்.

**“கொல்லை உழுகொழு ஏய்ப்ப, பல்லே**

**எல்லையும் இரவும் ஊன்தின்று மழுங்கி”**

**(பொருநராற்றுப்படை 117-118)**

**(எல்-பகல்; எல்லையும்-பகலும்)நீதி**

குற்றமற்ற கோவலனை தீர ஆராயாது கொன்றுவிட்ட பாண்டிய மன்னன் நெடுஞ்செழியன் தன் பிழையை உணர்ந்ததும்

**“ மன்பதைக் காக்கும் தென்புலக் காவல்!**

**என் முதற் பிழைத்தது: கெடுக என் ஆயுள்”**

**(சிலப்பதிகாரம்)**

எனக் கூறி மயங்கி விழுந்து உயிரை விடுகிறான். நீதிக்கு இலக்கணமாக தன் உயிரையும் கொடுத்தான் மன்னன்.

**மனிதநேயம்**

குறுகுறு என நடக்கும் புறாவினைக் கொல்ல வந்த பருந்துவின் பசித் துன்பம் நீங்க தன் உடம்பின் தசையை அரிந்து கொடுத்த சிபி மன்னனின் மூலம் மனிதநேயத்தை உணர முடிகிறது.

“ **குறுநடைப்புறவின் நெடுந் துயர் தீர**”....

**சிலப்பதிகாரம் (166-168)**

**மானமே பெரிது**

சோழவேந்தர் அனைவரினும் மேலான புகழ் மாலைகளைப் பெற்று விளங்குபவன் சோழன் கோச்செங்காணான் என்பவன். இவன் திருப்போர் என்ற இடத்தில் சேரன் கணைக்கால் இரும்பொறையை வென்று குடவாயிற் கோட்டத்துச் சிறையில் அடைத்து வைத்தான். சேர மன்னனுக்கு நீர் வேட்கை ஏற்படவே காவலாளரிடம் தண்ணீர் கேட்டான். அவர்கள் காலம் தாழ்த்தித் தண்ணீர் கொண்டு வர சேரன் அதை ஏற்றுக் கொள்ளாமல் இப்பாடலை எழுதி வைத்துவிட்டு உயிர் துறந்தான். ஈனநிலை பெறுவதைக் காட்டிலும் தம் வீரக்குடியையே பெரிதாக எண்ணினான்.

குழவி **இறப்பினும், ஊன்தடி பிறப்பினும்,**

**‘ஆள்அன்று' என்று வாளின் தப்பார்;**

**புறநானூறு (250)** இந்தப் பாடலை அடிப்படையாகக் கொண்டு இந்த நூற்றாண்டின் புலவர் சூரிய நாராயண சாஸ்திரியார் ‘மான விஷயம்' என்ற பெயரால் செய்யுள் நாடகம் ஒன்றை இயற்றியுள்ளார்.

**கடமையாற்றல்**

தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழிய மன்னன் வாடைக்காற்றும், மழைத்துளியும் வீசுகின்ற இரவு நேரத்திலும் படைத்தலைவன் உதவியுடன் பாசறைக்குச் சென்று காயமுற்ற வீரர்களுக்கு ஆறுதல் கூறுவதைத் தவறாமல் கடைபிடித்தான்.

**“நூல்கால் யாத்த மாலை வெண்குடை**

**துவ்வென்று**……

**நெடுநல்வாடை (184-188)**

**சிறந்த புலமை**

எட்டுத்தொகையில் அகநானூற்றைத் தொகுப்பித்தவன். பாண்டிய மன்னருள் இறுதியாய் வாழ்ந்த மன்னன், கானப்பேர் கடந்த உக்கிரப் பெருவழுதி ஆவான் . இவனுடைய அரசவையில் தான் திருக்குறள் அரங்கேற்றம் செய்யப்பட்டதாக கருதுகின்றனர். இவன் பாடிய பாடல் ஒன்று **அகநானூற்றிலும்(262**) மற்றொன்று **நற்றிணையிலும்(263)** சேர்க்கப்பட்டுள்ளன.

**நன்மை**

கரிகாலன் தன் குடிமக்களுக்குப் பல நன்மைகள் புரிந்தான். அவற்றில் மிகவும் சிறப்பானது காவிரி ஆற்றின் மேல் இவன் கட்டிய அணையே ஆகும். இதன் மூலம் மக்களுக்கு உணவை வழங்கிய உழவுத் தொழிலை வளர்த்ததில் பெரும்பங்கு இம்மன்னனையேச் சாரும். பழங்காலத் தமிழ் மன்னர்கள் நாட்டின் வளத்தை வளர்ப்பதில் கண்ணும் கருத்துமாக இருந்து வந்தனர்.

" **உண்டி கொடுத்தோர்**

**உயிர் கொடுத்தோரே**" என்னும் பேருண்மையை அவர்கள் நன்கு உணர்ந்திருந்தனர்.

**கல்வியைப் போற்றல்**

சங்க கால அரசர்கள் கல்வி அறிவு படைத்தவர்களாக விளங்கினார்கள் . மூவேந்தருள் பலர் பாடிய பாக்கள் புறநானூற்றில் உள்ளன. பாண்டியன் ஆரியப்படை கடந்த நெநெடுநெடுஞ்செழியன்

"**உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்**

**பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே**"

**(புறநானூறு 183)** என பாடுகின்றான். இதன் மூலம் கல்வியின் இன்றியமையாமை அரசனால் எவ்வாறு உணரப்பட்டது என்பது தெளிவாகிறது.

**கலையை வளர்த்தல்**

ஆடு கோட்பாட்டுச் சேரலாதன் மன்னன் என்னும் மன்னன் விறலியின் கூத்து நிகழ்ச்சிகளை நெடிய நேரம் பார்த்துக்கொண்டிருந்தான்.

"**அமிழ்துபொதி துவர்வாய் அசைநடை விறலியர் பாடல் சான்று நீடினைஉறைதலின்**"

**(பதிற்றுப்பத்து 51)**

துணங்கைக் கூத்தில் ஆடும் மக்களுடன் மக்களாக ஒன்றாகச் சேர்ந்து சேரலாதனும் ஆடிக் கலையை வளர்த்தான்.

"**முழா இமிழ் துணைங்கைக்குத் தழூஉப்**

**புணைஆக**

**சிவைப்புவல ஏற்றின் தலைக்கை தந்து**"

**(பதிற்றுப்பத்து 52)**

**முடிவுரை**

மனிதப் பண்புகளும் , வாழ்வியல் அறங்களும் மதிப்பிழந்து கொண்டிருக்கும் வேகம் நிறைந்த வாழ்க்கைச் சூழல் இன்றைய சமூகத்தை பெரிதும் பாதித்துள்ளது. மனிதப் பண்புகளை திரும்பிப் பார்க்கக் கூட நேரமற்ற நிகழ்வுகளால் மட்டுமே நகர்ந்து கொண்டிருக்கிறது இன்றைய

சமூகம். இதனை நெறிப்படுத்த, மேம்பாடடையச் செய்ய தமிழ் இலக்கியங்களின் பங்கு இன்றிமையாததாகும் மக்களாகப் பிறந்தவர்கள் எல்லோரும் உயர்வாக மதிக்கப்படுவது இல்லை அவர்களின் அறவொழுக்கம் உடையவர்களே உயர்ந்தவர்கள் என மக்களால் மதிக்கப்படுகிறார்கள் . அற ஒழுக்கங்களும், பண்பாடும் வளர்ந்தால் தான் வாழ்க்கை முழுமையாக நிறைவுபெறும் என்பதை உணர வேண்டும்.

**துணை நூற்பட்டியல்**

**மு.வரதராசன்-**இலக்கிய வரலாறு

கே.கே.**பிள்ளை-**தமிழகவரலாறு மக்களும் பண்பாடும்

**வேங்கடசாமி-சிலப்பதிகாரம் மூலமும் உரையும்**

**புலியூர்க்கேசிகன்-புறநானூறு,**

**பதிற்றுப்பத்து.**